<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>

<u>அ.வ.எண். 44/1998</u>

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திரு. இராஜாமுகமது அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23 –** ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **23.02.2026** |
| **பெயர்** | **காத்தவராயன்** |
| **த/பெ** | **முனுசாமி** |
| **சாட்சி** | **DW1** |
| **வயது** | **66** |
| **ஊர்** | **பசவன்பாளையம்** |
| **தொழில்** | **விவசாயம்** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 11.27.a.m**

<u>முதல் விசாரணை–</u>

1. நான் இவ்வழக்கின் பிரதிவாதியாவேன். எனது வாக்குமூலம் பிரமாணப் பத்திரம் மூலம் முதல் விசாரணை சாட்சியம் அளிக்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. இவ்வழக்கிற்கு ஆதரவாக கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

2. (1). 14.06.1983 தேதியிட்ட வேதாளம் என்கிற முனுசாமிக்கு 1ம் பிரதிவாதி எழுதி கொடுத்த கிரைய பத்திரம் அசல் **பி.சா.ஆ 1** எனவும்.

(2). 20.06.1987 தேதியிட்ட வேதாளம் என்கிற முனசாமிக்கு 1–ம் பிரதிவாதி எழுதி கொடுத்த கிரைய பத்திரம் அசல் **பி.சா.ஆ 2** எனவும்.

(3). 08.06.1987 தேதியிட்ட வேதாளம் என்கிற முனுசாமிக்கு 1ம் பிரதிவாதி எழுதி கொடுத்த கிரைய பத்திரம் அசல் **பி.சா.ஆ 3** எனவும்.

(4). 21.07.1992 தேதியிட்ட வேதாளம் என்கிற முனுசாமிக்கு வழங்கப்பட்டது பட்டா எண்.518 அசல் **பி.சா.ஆ 4** எனவும்.

(5). 30.06.1994 தேதியிட்ட பொன்னேரி வட்டாச்சியர் வேதாளம் என்கிற முனுசாமிக்கு 25.05.1994 அன்று காலமானதற்கு கொடுத்த இறப்பு

சான்றிதழ் அசல் **பி.சா.ஆ 5** எனவும்.

(6). 21.07.1994 பொன்னேரி வட்டாச்சியர் வேதாளம் என்கிற முனுசாமி வாரிசுகள் குறித்து கொடுத்த வாரிசு சான்றிதழ் அசல் **பி.சா.ஆ 6** எனவும்.

(7). 1994 முதல் 2003 வரையிலான பட்டா எண் 518 க்கு செலுத்தப்பட்ட கிஸ்து ரசீதுகள் 5 எண்ணிக்கைகளை அசல் **பி.சா.ஆ 7** எனவும்.

**(எதிர் தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபித்து, ஆட்சேபணைக்குட்பட்டு பி.சா.ஆ 2 மற்றும் பி.சா.ஆ 3 குறியீடு செய்யப்படுகிறது).**

**(குறுக்கு விசாரணை செய்ய வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**

**விசாரணை முடியும் நேரம். 11.30.a.m.**